# உகந்தை முருகன்
# பதிகம் பன்னிரெண்டு



பூவை சரவணன்- கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

"ஆடும் பரிவேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்"

புக்தி இலக்கியங்கள் அத்தி பூத்தாற்போல் வெளிவரும் இக்காலகட்டத்தில் தம்பி "பூவை சரவணன்" அவர்களின் முருகன் பதிகங்கள் சிறிதானாலும் பெரிதாகப் போற்றப்பட வேண்டியவையாகும்.

இவர் தன் வாழ்வில் துன்பங்களையும், துயரங்களையும் கண்டவர். முருகப்பெருமான் மீது என்றும் பக்தி கொண்டவர் அதனால் தனக்கு வந்த சோதனைகளையும், வேதனைகளையும் சாதனையாக்கித் தன்னையே மற்றவர்களுக்குப் போதனையாகக் காட்டியவர். எந்த வேளையிலும் சரமாரியாக வரகவி பாடக்கூடிய சரவணன் முருகப்பெருமானின் தீவிர பக்தர் 'ஆறுமுகன் அருள்மணிமாலை" பாடிய இக்கவிஞர் உகந்தை முருகன் மேல் பாடியுள்ள பன்னிரு பாடல் முருகப் பெருமானின் பன்னிரென்டு கண்களையும் ஞாபகப்படுத்தும் ஞானப் பாடல்கள் தமிழர்களால் பேணப்பட வேண்டிய பாடல்கள்.

முருகப் பெருமானையும் சுப்பிரமணியன் அருளின் அருமையையும் இச்சிறு நூலில் "பூவை சரவணன்" புடம் போட்டுக் காட்டியுள்ளார். செந்தேனை நிகர்த்த 'செங்கல்வராயன்' அருள் தேனை அன்பர்கள் பருகி, உரகி இன்பம் பெருகி மகிழட்டும். தம்பி "பூவை சரவணன்" இதுபோன்ற பெரிய கவிமாலை எழுதி வெளியிடட்டும் அதற்கு எல்லாம் வல்ல முருகப் பெருமான் அருள் பாலிக்கட்டும் என்று உகந்தை முருகப் பெருமானின் திருவடி வணங்கி வாழ்த்துகின்றேன்.

வ. ஞானமாணிக்கம்
தலைவர்

நாவலர் அறநெறிப் பாடசாலை
பாண்டிருப்பு-01, கல்முனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

இந்நினைவில் இருந்து
அகலாத என் மக்களின்
ஆன்ம ஈடேற்றத்துக்கு
உகந்தை முருகள்
பதிகம் பண்ணிரெண்டு சமர்ப்பணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உகந்தை முருகன் பதிகம் பன்னிரெண்டு

சரவணத்தில் உதித்தவனே சரண் புகுந்தேன்
சங்கரனார் மைந்தன்மேல் நினைவும் கொண்டேன்
வரமெனக்கு அருள்கவென வணங்கி நின்றேன்
வண்ண மயில் வாகனனே வாருமையா
கரம் கூப்பி தொழுமடியார் மனக்குறையை
கந்தனே வந்தருளி காரும் ஐயா......
உரம்கொண்ட வேல் பாய்ந்த மலையாமெங்கள்
உகந்தைமலை முருகோனே வருகு வாயே.....

01

சாந்தஸ்வ ரூபமாய் வதனம் கொண்டாய்
சற்குருவாய் பிரணவத்தின் பொருளும் சொன்னாய்
காந்தமலர் கண்ணழகா கந்தா உன்னை
காணவென்றே பக்தரெல்லாம் ஓடி வாறார்
வீழ்ந்தழுது புரண்டெழும் மாந்தரை நீ
வீணரென்று வெறுத்து இருக்க லாமோ?....
ஊழ் வினையை போக்கிடவே உவந்துறைந்த
உகந்தைமலை முருகோனே வருகு வாயே.....

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்திர வேலாயுதனாய் கோயில் கொண்டாய்
திருக்கோயில் ஊர் பதியில் சிறந்திலக்கி
கத்துதிரைக் கடலும் உனைத் தாலாட்ட
கானமயில் நடனமும் காட்டி நிற்க
முத்துமணி மண்டபங்கள் சமைத்து மக்கள்
மெழுகெனவே உருகிமனம் தேடி வாறார்......
உக்கிரமாய் எறிந்தவேல் உறைந்த எங்கள்
உகந்தைமலை முருகோனே வருகு வாயே....

03

சீறிவந்த சூரனையும் சிதைத்து அன்று
சிறுமையுற்ற தேவர்களை வாழச் செய்தாய்
ஆறிரு தடந்தோள்கள் காட்டி மண்ணில்
அபயங்கள் கொடுத்த வகை அறிவோமையா
கூறு கொண்ட உன்னடியார் மனையில் இன்று
கூடிவாழ வழியொன்றை காட்டும் ஐயா.......
காடுசூழ் மலைமேல் உறைந்த எங்கள்
உகந்தைமலை முருகோனே வருகு வாயே......

04

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரனே முருகா உன் சோதனையோ
சுனாமியும் வந்ததெம்மை சூறை கொள்ள
அந்தரத்தில் கூடு கொண்ட புள்ளினம்போல்
அழுகின்றோம் தொழுகின்றோம் ஆரும் இன்றி
கந்தா உன் கைவேலால் வினை அறுப்பாய்
காரான போர்மாய கருணை செய்வாய்.....
பந்தமென வந்தோமே பாலா எங்கள்
பவளமலை முருகோனே வருகு வாயே.....

05

சூழ்ந்திட்ட போரதுவும் முடிய வில்லை
சுகமான வாழ்வும் நாம் வாழவில்லை
வீழ்ந்திட்ட மண்டு மனை உயரவில்லை
விரக்தியுற்ற மனங்கள் இன்னும் மீளவில்லை
கந்தற்ற மரக்கொப்பின் காகம் ஆகி
கதறி அழக்காணாமல் இருப்ப தென்ன........
உன்பற்றில் உளறுகின்றோம் முருகா எங்கள்
உகந்தைமலை முருகோனே வருகு வாயே........

06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செந்தமிழர் வாழ்வை நீ பாருமையா
சிரிப்பொலியை மறந்து வெகு காலமைய
ஐம்புலனும் செயலிழந்து போன தையா
ஆகாய மழைக் கண்ணாய் ஆனதையா
மென் கொடியாள் தெய்வானை பாகாநீயும்
மின்னெனவே வந்தெம்மை காரும் ஐயா.........
உன்துணையே வேறின்றி கதறு கின்றோம்
உகந்தைமலை முருகோனே வருகு வாயே.........

07

சேவலும் மயிலும் போற்றி என்பார்
திருக்கை வேலவனே போற்றி என்பார்
சாலவும் உன் நாமம் கூறிக் கூறி
சளைக்காமல் களைக்காமல் தேடி வாறார்
பாலையுடன் குறுஞ்சி முல்லை மருதம் நெய்தலூடே
பரவுகின்றார் மக்கள் கூட்டம் பாருமையா......
காலனணுகா காடுசூழ் கோயில் கொண்ட
உகந்தைமலை முருகோனே வருகு வாயே.....

08

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவம் தளைக்க என்றே அக்கால்
சம்பந்தன் உருக் கொண்டு அவதாரித்தாய்
மைவண்ணத் தண்ணலின் மருகன் ஆகி
மலர்மீது தவழ்ந்து வந்து முருகுமானாய்
மெய்யென்று பொய்வாழ்வை விரும்பு வோர்க்கு
விளக்கி நின்றாய் அருணகிரி வாழ்விணூடே.....
மையாளும் கண்ணாள் வள்ளியோ டுறையும்
உகந்தைமலை முருகோனே வருகு வாயே.....

09

சொல்லொண்ணா துயர் கொண்டே நாமும்
சுழிக்காற்றில் பட்டழிந்த துரும்பாய் ஆனோம்
கல்லெனச் சதங்கை கொஞ்சும் கார்த்திகையார்
கைதனிலே வளர்த்திட்ட கந்தா வாராய்
தொல்லைகொள் இவ்வுலகில் வாழ நாளும்
துணைநிற்பாய் தூயதமிழ் தலைவா நீயும்....
முல்லை மலர் மொட்டவிழ்க்கும் முதிரைக்காட்டு
உகந்தைமலை முருகோனே வருகு வாயே.....

10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனார் சிவநாரின் மகனே உந்தன்
சோதனைகள் போதுமையா நாமும் வாழ
ஆழிசூழ் இவ்வுலகில் அருளைத் தாராய்
பாதிமதி சடையணிந்தான் பாலா நீயும்
பாசிமணி ஊசிவிற்கும் குல வள்ளியை
பண்டார வடிவுடனே மணந்து நின்றாய்.....
தேசிகனே உனதருளைத் தேடி வாறேன்
தேரேறும் முருகோனே வருக வாயே......

11

சௌந்தரியாள் பார்வதியின் புதல்வா எங்கள்
சந்ததிகள் தளைக்க அருள் தாருமையா
சுந்தரியார் தெய்வானை மணமும் காண
சூரனுடன் போர் தொடுத்து வெற்றி கண்டாய்
புண்டரிக மலர் கொண்டு துதிப்போமையா
போரழிய கடைக்கண்ணால் பாருமையா.....
வண்டுறையும் மலர்ச்சோலை கோயில் கொண்ட
உகந்தைமலை முருகோனே வருக வாயே.....

12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பிரபஞ்சம் இயற்கையாலும், செயற்கையாலும் மனித வாழ்வின் தேரை ஓட்டிக்கொண்டிருக்கின்றது. மனித மனங்கள் ஆசை மிகுதியினால் அர்த்தமற்ற சிந்தனைக்குள் தன்னை அர்ப்பணித்ததினால், பஞ்ச பூதங்களும் மிக வேகமாக செயற்பட்டு உலக அழிவைத் தாராளப்படுத்திக் கொண்டிருக்கின்றது. இதற்கு நானும் ஒதுக்கப்பட்டவன் அல்ல. அனுபவ உணர்வினுடே தெய்வமே கதிஎன வாழ்ந்த எனது வாழ்க்கை விரக்தியின் விளிம்புக்குச் சென்றாலும் முருகன் திருவருளால் மீண்டேன் என நினைந்து "அவனருளாலே அவன்தாழ் வணங்கி" பண்ணிரு பாடல்களையும் யாத்து உங்கள் கரங்களில் தவழ விடுகின்றேன்.

இந்நுலை வெளியிட உதவிய அன்பர்கட்கும், பாடலை சொல் நயத்துடன் ஒப்பு நோக்கி அணிந்துரை தந்து ஊக்கப்படுத்திய கவிஞர், கலாபூசணம், கவிமணி, வ.ஞானமாணிக்கம் அண்ணன் அவர்கட்கும் எமது நயமான வாழ்த்துக்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org